THIRU K. M. SUBRAMANIAM: I am pressing, Sir. When my amendment is being put to vote, I want to seek a clarification.

MR. SPEAKER: Now it is the time of voting and there cannot be clarification or expression of opinion. The hon. Member may resume his seat.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

MR. SPEAKER: The motion is talked out.

8. தன்னிலை விளக்கம்.

தான் கூறாத ஒன்றைக் கூறியதாக ஓர் உறுப்பினர் சொன்னது குறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய காலை நிகழ்ச்சியின் இடை நேரத்தில் நான் மாவட்ட ஆட்சியாளருடைய மாநாடு ஒன்றிலே கலந்து கொள்ளச் சென்றிருந்தபோது—நான் இந்த அவையில் இல்லாதது ஒரு குறை அல்ல—நான் பேசாததை, நான் சொல்லாத ஒன்றை தான் சொன்னதாக ஒரு அங்கத்தினர் சொன்னதாக அறிந்தேன். நான் சொன்னதை விட்டுவிட்டு, சொல்லாததை, பத்திரிகைச் செய்தியை அடிப்படையாக வைத்து, என்னிடத்தில் பேசிய ஒருவர் எழுதிய கடிதத்தை வைத்து, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், தமிழ் மாணவர்களையும், தமிழ்க் கல்லூரி களையும் நான் இழிவுபடுத்திப் பேசியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியாவது அவருக்கு ஒரு தமிழ்ப்பற்றினை இந்நிகழ்ச்சி உண்டாக்கியிருந்தால் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஒரு நிகழ்ச்சியிலே கும்பகோணத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது ஒரு மாணவர் மேடைமீது வந்து ஒரு வேண்டுகோள் கொடுத்தார். நான் அதைப் படிக்க முடியாததால் எதைப்பற்றி இந்த வேண்டுகோள், என்ன நிகழ்ச்சி என்றேன், நான். அந்த மாணவர் ' எங்கள் கல்லூரி மூடப்பட்டது, அதைப் பற்றித்தான் இந்த வேண்டுகோள் ' என்று சொன்னார். ' உங்கள் கல்லூரி மூடப்பட்டதா ? அது அரசினர் கல்லூரியா, தனியார் கல்லூரியா ? ஏன் மூடப்பட்டது ? ' என்றேன் நான். ' தனியார் கல்லூரி, நாங்கள் ஸ்டிரைக் செய்தோம் ' என்றார் மாணவர். " எதற்காக ஸ்டிரைக் நடத்தினீர்கள் ? " என்று நான் கேட்டேன். ' மத்திய சர்க்கார் உதவிப் பணம் எங்களுக்கு அனுப்பி வரும். இப்போது அந்தப் பணம் அனுப்பவில்லை ' என்றார் மாணவர். ' மத்திய சர்க்கார் பணம் அனுப்பவில்லையென்றால் என்னிடத்தில் முறையிடுகிறீர்களே ? ' என்றேன் நான். ' மத்திய சர்க்காருக்குத்

1971 டிசம்பர் 18]

[திரு. க. அன்பழகன்]

தெரிவிக்க வேண்டும்' என்றார் மாணவர். 'அப்படியென்றால், கல்வியமைச்சர் மூலமாக வேண்டுமானால் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துகிறோம்' என்றேன் நான். இந்தக் கல்லூரிக்கு மத்திய சர்க்கார் பணம் தருகிறது. அந்த உதவிப் பணம் நிறுத்தப் பட்டுவிட்டது. அது மாநில அரசாங்கத்தின் நேரடியான நிர்வா கத்தில் வருகிற கல்லூரியா என்றால் இல்லை, தனியார் கல்லூரி.

வேலை நிறுத்தம் செய்த அந்த மாணவர்கள் தமிழ்நாடு அரசாங் கத்தின் பஸ்ஸைத் தடுத்து நிறுத்தினார்கள். போக்கு வரத்துக்கு இடையூறு விளைவித்திருக்கிறார்கள். அதன் பின்னர் போலீசார் தலையிட்டு மாணவர்களைக் கலைக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. அதன்பிறகுதான் கல்லூரியை மூடியிருக்கிறார்கள். மாணவர்கள் வேலைநிறுத்தம் என்றால் எதற்காக பஸ்ஸை நிறுத்தினார்கள் ? பிறகு அந்த மாணவரைப் பார்த்து, திருப்பனந்தாள் மடம் இலவசமாகச் சாப்பாடு போடுகிறார்களா என்றேன் நான். 'ஆமாம்' என்றார் அந்த மாணவர். 'வேலைநிறுத்தம் நீங்கள் செய்தீர்களா ? கல்லூரி முதல்வர் செய்தாரா ?' என்றேன் நான். 'நாங்கள் கல்லூரிகளுக் குப் போகவில்லை' என்றார் அவர். 'நீங்களே கல்லூரிகளுக்குப் போகாமல் வேலைநிறுத்தம் செய்து, பஸ்ஸையும் நிறுத்திவிட்டு என்னிடத்தில் வந்து முறையிடுகிறீர்களே, நீங்கள் இலவச சாப்பாடு பெற்றுக்கொண்டு கல்லூரிக்குப் போகாமல் இருக்கிறீர் களே, தமிழ் படித்ததாகச் சொல்லிக் கொண்டு தமிழ் மாணவர்கள் பெயரைக் கெடுக்கிறீர்களே?' என்று கேட்டேன்.

தமிழ் மாணவர்கள் சிலருடைய தூண்டுதலால் ஆட்சிக்கு விரோதமாக திருப்பப்படுகிறார்கள். அரசாங்கத்தை எதிர்த்து மாணவர்கள் போராட்டம் நடத்த வேண்டுமென்று சிலர் தூண்டு பவர்களாக இருக்கிற காரணத்தால், நான் அவர்கள் போக்கைக் கண்டித்தேன். நான் அமைச்சராக இருக்கிற காரணத்தால் கண்டிக்கவில்லை. தமிழ் ஆசிரியர் என்கிற காரணத்தால் கண்டித் தேன். நீங்கள் கல்லூரிக்குப் போகாமல் இங்கே வந்து முறையிடு கிறீர்களே, அப்படி கல்லூரி மூடியிருந்தால் முறைப்படி விண் ணப்பம் செய்யுங்கள் என்று பதில் அளித்தேன். நான் அளித்த பதிலில் கடுமையான வார்த்தை எதுவும் இல்லை. வேண்டுமானால் கடுமையான குரல் இருந்திருக்கும். அது என் பிறப்புரிமை. ஆகவே இங்கே பேசப்பட்ட செய்தி உண்மைக்கு மாறானது. அப்படி ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது என்று பல நண்பர்கள் தெரிவித்தனர். பல தவறான செய்திகள் வந்திருக்கிற பத்திரிகையை நான் பார்ப்பது இல்லை என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார் . . . .

MR. SPEAKER : The Hon. Minister has given an explanation and the House is convinced of the same.

THIRU K. T. K. THANGAMANI : No debate is allowed when a statement is made.